**CC.NO. 43/2020 DW-1**

நாள் : 07.11.2025

பெயர் : உஷா

த/பெ : பழனி

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1 புவனேஷ்வரி எனது மருமகள் ஆவார். அ.சா.1 க்கும் எனது மகன் ஜெயகணேஷ்க்கும் பெரியோர்கள் பார்த்து தான் திருமணம் செய்தோம் என்றால் சரிதான். புவனேஷ்வரியும் எனது மகனும் திருமணம் முடிந்து ஒரு வாரம் எங்கள் வீட்டில் இருந்தார்கள் என்றும் அதன் பின்பு ஆற்காட்டில் தனி குடித்தனம் வைத்ததாகவும் கூறுகிறேன். அது போல் தனி குடித்தனம் வைத்ததற்கு வாடகை ஒப்பந்த பத்திரம் உள்ளதா என்றாலும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றாலும் இல்லை. 08.07.2019 அன்று 20 சவரண் நகை மற்றும் ரூ.5,00,000/– பணத்தை வரதட்சனையாக நாங்கள் கேட்டதாக தான் எனது மருமகள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான்.

அந்த புகாரின் அடிப்படையில் தான் 19.08.2019 அன்று போலீசார் விசாரணைக்காக காவல்நிலையம் அழைத்தார்களா என்றால் என்னை அழைக்வில்லை. போலீசார் விசாரணையின் போது 19.08.2019 அன்று காவல்நிலையத்திற்கு சென்று திருமணத்தின் போது போட்ட நகைகளை மூன்று மாதத்திற்குள் திருப்பி தருவதாக கூறி எழுதி கொடுத்து வந்தேன் என்றால் சரியல்ல. திருமணத்தின் போது அ.சா.1 B.Sc (Nursing) படித்து வந்தார் என்றால் சரிதான். திருமணத்தின் போது அவரை தொடர்ந்து படிக்க வைப்பதாக உறுதி கூறினோம் என்றால் சரிதான். ஆனால் அவரை திருமணத்திற்கு பிறகு அவரை நாங்கள் தொடர்ந்து படிக்க வைக்கவில்லை என்றால் சரியல்ல. வேலூரில் படித்து கொண்டு தான் இருந்தார்.

அ.சா.1 அளித்த புகாரின் விசாரணைக்காக நான் காவல்நிலையம் சென்ற போது தான் என்னை போலீசார் தாக்கினார்களா என்றால் சரிதான். அப்போது போலீசார்ரூ.5,00,000/- கொடுக்கிறேன் என்று ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டு செல்லுமாறு மிரட்டினார்கள். இந்த வழக்கானது எனது மருமகள் அளித்த புகாரின் பேரில் தான் நடந்து வருகிறது என்றால் சரிதான். இந்த வழக்கை திசை திருப்புவதற்காக தான் போலீசார் மீது நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

SADASIVAM POORNIMA

District Munsif cum Judicial Magistrate, Ranipet
Digitally signed by SADASIVAM POORNIMA
Date: 2025.11.10 15:34:46 +0530

District Munsif cum Judicial Magistrate,

Ranipet.